www.ecourtsindia.com



Judicial Form No. 53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure.)

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

**MAGALIR NEETHIMANDRAM, CHENNAI AT ALLIKULAM.**

Case No. **S.C. 476/2023** Dated: **01.03.2025.**

**Deposition of PW1 witness for (Prosecution**

**Defence**

**Court)**

| | | |
|---|---|---|
| Name | : | திரு. சேகர் |
| Father's Name /Husband's Name | : | திரு. மாயவன் |
| Village | : | வண்ணாரப்பேட்டை |
| Taluk | : | சென்னை |
| Caste | : | – |
| Calling | : | கொத்தனார் |
| Religion | : | – |
| Age | : | 55 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 1st day of March 2025.

Signature of witness.

எதிரி ஆஜர்.

S.J.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCH010371122023/truecopy/order-1.pdf

முதல் விசாரணை–

நான் தற்போது நம்பர். 6/2, காளிங்கராயன் 2வது தெரு, பழைய வண்ணாரப்பேட்டை என்ற விலாசத்தில் குடியிருக்கிறேன். நான் கொத்தனராக வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்த அமிர்தவள்ளி என்னுடைய மனைவி. ஆஜர் எதிரியை தெரியும் அவர் பெயர் தெரியாது. 2019ல் ஆஜர் எதிரியும் என் மனைவியும் சேர்ந்து தேனாம்பேட்டையில் வைத்து ஒரு சலூன் கடையை நடத்தி வந்தார்கள். சலூன் கடையின் பெயர் தெரியவில்லை. எனக்கு சொந்த ஊர் உளுந்தூர்பேட்டை. சென்னைக்கு வந்து சுமார் 30 ஆண்டுகள் ஆகிறது. எனக்கும் என் மனைவிக்கும் திருமணம் ஆன தேதி மாதம் வருடம் ஞாபகம் இல்லை. திருமணத்தின் வாயிலாக எனக்கு மாதேஷ்வரன் மற்றும் தினேஷ்குமார் என்று இருமகன்கள் உள்ளனர். 2019 ஜுலை மாத இறுதியில் தேதி 31ஆ என்று சரியாக ஞாபகம் இல்லை, என் மனைவி வீட்டில் அழுது கொண்டிருந்தார் நான் என்ன என்று கேட்டேன். ஆஜர் எதிரியும் தானும் நடத்தி வந்த கடையில் நஷ்டமாகிவிட்டது என்றும் அது சம்மந்தமாக ஆஜர் எதிரியை கேட்கபோவதாகவும் கூறினார். நான் வேலைக்கு நேரமாகிவிட்டதால் சென்று விட்டேன். நான் வேலை முடிந்து மாலை 06.00 – 06.30 மணியளவில் வீடு திரும்பிய போது என் மனைவி

S.J.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCH010371122023/truecopy/order-1.pdf

www.ecourtsindia.com

வீட்டில் இல்லை. நான் என் மனைவியின் செல்போனுக்கு போன் செய்தேன் போனை அவர் எடுக்கவில்லை. 2, 3 முறை போன் செய்தும் அவர் எடுக்கவில்லை அதனால் நான் வீட்டில் காத்திருந்தேன். அப்போது பெரம்பூர் காவல் நிலையத்திலிருந்து போன் செய்து நிலையத்திற்கு வருமாறு கூறினார்கள். நான் காவல் நிலையம் சென்றேன். அப்போது மணி சுமார் இரவு 09.00 மணி இருக்கும். போலீசார் என் மனைவி என்ன செய்கிறார் என்று கேட்டார்கள் நான் மேலே சொன்னதுபோல் சொன்னேன். போலீசார் உன் மனைவிக்கு என்ன ஆனது என்று தெரியுமா என்று கேட்டார்கள் தெரியாது என்றும் போன் செய்தால் எடுக்கவில்லை என்றும் கூறினேன். போலீசார் என் மனைவி இறந்துவிட்டதாக தெரிவித்தார்கள். போலீசார் யார் இதை செய்தது என்று தெரியுமா என்று கேட்டு கூண்டில் வைத்திருந்த ஆஜர் எதிரியை என்னிடம் காட்டினார்கள். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ளது என்னுடைய கையொப்பம். அந்த கையொப்பம் மட்டும் **அசாஆ.1**. அதில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகைபடத்தில் உள்ளது என்னுடைய மனைவி அது **அசாஆ.2**. போலீசார் என்னை விசாரித்தார்களா என்று ஞாபகம் இல்லை.

S.J.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCH010371122023/truecopy/order-1.pdf

www.ecourtsindia.com

(அரசு தரப்பு வேண்டுகோளின் பேரில் சாட்சி பிறழ்சாட்சியாக அறிவிக்கப்பட்டு அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டார்).

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை– (அனுமதியுடன்)

என்னை போலீசார் விசாரித்தபோது ஆஜர் எதிரியின் பெயர் செந்தில்குமார் என்றும் அவர் எங்கள் குடும்பநண்பர் என்றும் அவரும் என்னுடைய மனைவியும் சேர்ந்து ஆழ்வார்பேட்டையில் Unisex Saloon and Spa என்ற பெயரில் தொழில் நடத்தி வந்தார்கள் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சொன்னாலும் சொல்லியிருப்பேன் தற்போது பல வருடம் ஆனதால் ஞாபகம் இல்லை. மேலும் அந்த தொழில் நஷ்டம் ஏற்பட்டதாலும் அதன் நஷ்டத்தை என் மனைவியே ஏற்றுகொள்ளவேண்டும் என்று ஆஜர் எதிரி சொன்னதால் பலமுறை ஆஜர் எதிரிக்கும் என் மனைவிக்கும் பிரச்சனைகள் ஏற்பட்டது என்று என் மனைவி என்னிடம் பலமுறை சொல்லியுள்ளார் என்று சொல்லியுள்ளேன் என்றால் தவறு. சம்பவத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பாக ஆஜர் எதிரி என் மனைவியிடம் கடன் தொகையை கொடுக்க சொல்லி வற்புறுத்தினார் என்றும் இல்லை என்றால் செத்து தொலைந்து போ என்று ஆஜர் எதிரி சொன்னதாக என் மனைவி என்னிடம் சொல்லி

S.J.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCH010371122023/truecopy/order-1.pdf

www.ecourtsindia.com

அழுதார் என்று என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 31.07.2019 தேதியில் சென்னை பெரம்பூர், ஆறுமுகம் தெரு, எண். 27/8 ஏ என்ற முகவரியில் உள்ள ஆஜர் எதிரியின் வீட்டிற்கு சென்று வருவதாக சொல்லி போன என் மனைவி மாலை வரை வீட்டிற்கு வராத காரணத்தினால் அவரை தொலைபேசியில் தொடர்பு கொண்டேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் மனைவி தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் நிலையில் இல்லை என்பதால் நான் ஆஜர் எதிரி செந்தில் வீடு இருக்கும் 2 மாடிக்கு சென்று பார்த்தபோது கதவு திறந்த நிலையில் இருந்ததாகவும் உள்ளே ஹாலில் ஜன்னலுக்கு ஸ்கிரீன் மாட்டும் பைப்பில் நைலான் கயிறால் தூக்குமாட்டி தொங்கிய நிலையில் என் மனைவி காணப்பட்டார் என்றும் நான் படுக்கையறை கதவை தட்டியபோது செந்தில்குமார் தூக்கத்திலிருந்து எழுந்து வந்து கதவை திறந்தார் என்று  சொல்லியுள்ளேன் என்றால் தவறு. என் மனைவியை மனஉளைச்சலுக்கு ஆளாக்கி தற்கொலைக்கு தூண்டிய ஆஜர் எதிரி செந்தில் குமார் மீது நடவடிக்கை எடுக்க சொல்லி காவல் நிலையத்தில் புகார் அளித்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் தவறு. தற்போது ஆஜர் எதிரியை காப்பாற்ற மாற்றி பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் தவறு.

S.J.

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCH010371122023/truecopy/order-1.pdf

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

என் மனைவியும் ஆஜர் எதிரியும் சலூான் கடை நடத்தியதற்கு எழுத்து மூல ஒப்பந்தம் உள்ளதா என்றால் அது பற்றி தெரியாது. இந்த வழக்கின் புகாரினை யார் எழுதினார்கள் என்று தெரியாது. வெள்ளைதாளில் நான் கையொப்பம் இட்டேனா என்றால் எழுதப்பட்ட தாளில் தான் நான் கையொப்பம் இட்டேன். புகாரில் என்ன எழுதப்பட்டது என்று தெரியாது.

<u>மறுவிசாரணை</u>– இல்லை.

//Sd//- சேகர்,

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct".

//Sd//- Tmt. J. Sridevi.,

Sessions Judge,

Mahalir Neethimandram,
Chennai.

/E-Court Web Copy/

Sessions Judge,
Mahalir Neethimandram,
Chennai.

S.J.

www.ecourtsindia.com

This is a True Copy of the Court Records Online. Authenticated @ districts.ecourtsindia.com/cnr/TNCH010371122023/truecopy/order-1.pdf